இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
முகாமைத்துவக் கற்கைப் பீடம்

முகாமைத்துவக் கற்கைகள் (சிறப்பு) பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம்
OSU3571: முகாமைத்துவக் கோட்பாடுகள்
இறுதிப் பரீட்சை -2024/2025
காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி: 28 ஜூன் 2025 *நேரம்: மு.ப 9.30 - மு.ப 12.30*

அறிவுறுத்தல்கள்

- இவ்வினாத்தாள் ஐந்து (05) வினாக்களை உள்ளடக்கியுள்ளது. தரப்பட்ட ஐந்து (05) வினாக்களில் முதலாம் (01) வினா கட்டாயமானது. எஞ்சிய வினாக்களில் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கு விடையளிக்க. மொத்தமாக நான்கு (04) வினாக்களுக்கு விடையளிக்கப்பட வேண்டும்.
- அனைத்து வினாக்களுக்கும் சமமான புள்ளிகள் ஒதுக்கப்பட்டுள்ளது (ஒவ்வொரு வினாவிற்கும் 25 புள்ளிகள்).
- நேர்த்தியான மற்றும் தெளிவான கையெழுத்துக்களில் விடையளிக்கப்பட வேண்டும்.

வினா 01

i. "ஒரு சமூகத்தின் செயல்பாடுகள் நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே. சமூகம் முழுவதும் பரவியுள்ள இந்நிறுவன அமைப்புகள் பொதுமக்களின் வாழ்க்கையின் இன்றியமையாத அங்கமாகும்". வணிக நிறுவனங்கள் சமூகத்தில் கொண்டுள்ள பங்கை வலியுறுத்தி. இக்கூற்று தொடர்பான உங்கள் நிலைப்பாட்டை தெளிவுபடுத்துக. (05 புள்ளிகள்)

ii. 'Wings' ஆடைத் தொழிற்சாலையின் மனிதவள முகாமையாளரான திருமதி. ரசிகா. ஊழியர்களால் நன்கு விரும்பப்படுகிறார். ஏனெனில் அவர் அடிக்கடி ஏற்படக்கூடிய பிரச்சினைகளைத் தீர்க்க உதவுவதோடு அவர்களின் சார்பாக உயர் நிர்வாகத்துடன் பிரச்சினைகளைப் பற்றி பேச்சுவார்த்தை நடாத்துகிறார். அவர் நிகழ்த்தும் இரண்டு (02) முகாமைத்துவ வகிபாகங்களை (Mintzberg இன் கட்டமைப்பின் படி) அடையாளம் காண்பதோடு நிறுவனத்தின் வெற்றிக்கு அவற்றின் முக்கியத்துவத்தை தெளிவுபடுத்துக. (05 புள்ளிகள்)

iii. ஒரு நிறுவனம் ஒரு புதிய ஊழியர் செயல்திறன் மதிப்பீட்டு முறையை (Performance appraisal system) அறிமுகப்படுத்துகிறது. இது ஊழியர்களுக்கு திட்ட வகிபாகங்களைத்

(project roles) தேர்ந்தெடுப்பதற்கும் புதிய யோசனைகளை முன்வைப்பதற்குமான சுயாட்சியையும், சுதந்திரத்தையும் வழங்குகிறது. மெக்ரிகோரின் கோட்பாடு X மற்றும் கோட்பாடு Y (McGregor's Theory X and Theory Y) ஆகியவற்றைப் பயன்படுத்தி, நிறுவனம் அதன் ஊழியர்களைப் பற்றி கொண்டுள்ள அனுமானங்களை மதிப்பீடு செய்க. (05 புள்ளிகள்)

iv. ஒரு உள்ளூர் 5 ரக நட்சத்திர ஹோட்டலின் உரிமையாளர் தனது செயல்பாடுகளை வெளிநாட்டிற்கு விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளார். இந்த முயற்சியில் ஹோட்டல் உரிமையாளர் பயன்படுத்தக்கூடிய இரண்டு (2) திட்டமிடல் நுட்பங்களை விளக்குக. (05 புள்ளிகள்)

v. ஒரு தொழில்நுட்ப நிறுவனத்தின் உயர்மட்ட நிர்வாகம் புதிய தொழில்நுட்ப போக்குகள் மற்றும் வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு ஏற்ப நிறுவனத்தை மறுசீரமைக்க முடிவு செய்கிறது. இந்த மாற்றத்தை வெற்றிகரமாக செயல்படுத்துவதில் முகாமையாளருக்கு பயனுள்ளதாக அமையக்கூடிய இரண்டு (02) நவீன சமகால முகாமைத்துவ அணுகுமுறைகளைப் (Contemporary Management Approaches) பற்றி விவரிக்க. (05 புள்ளிகள்)

<u>வினா 02</u>

நிறுவன நோக்கங்களை அடைவதற்கு தலைமைத்துவம் ஒரு முக்கிய அங்கமாகக் கருதப்படுகிறது. குறைந்தபட்சம் மூன்று (03) வெவ்வேறு தலைமைத்துவக் கோட்பாடுகளை (Leadership theories) விமர்சன ரீதியாக மதிப்பீடு செய்து, அவற்றின் முக்கிய அனுமானங்கள், பலம் மற்றும் பலவீனங்களை வலியுறுத்துக. மேலும் ஓர் உண்மையான நிறுவன சூழலில் தலைமைக் கோட்பாடுகளின் நடைமுறை பொருத்தப்பாட்டினை மதிப்பீடு செய்க. (25 புள்ளிகள்)

<u>வினா 03</u>

சமீபத்திய பட்டதாரியாக, கொழும்பில் உள்ள ஒரு நடுத்தர அளவிலான நுண் நிதி நிறுவனத்தின் மனித வள முகாமையாளருக்கு உதவியாக ஒரு நிர்வாக பயிற்சியாளராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளீர்கள் என்று வைத்துக்கொள்வோம். அதிக எண்ணிக்கையிலான ஊழியர்கள், குறைந்த உந்துதல் அல்லது ஊக்குவிப்பு மற்றும் தகுதி வாய்ந்த பணியாளர்களின் பற்றாக்குறை உள்ளிட்ட முக்கியமான மனித வள சவால்களை இந்நிறுவனம் எதிர்கொள்கிறது.

இந்நிறுவனத்தின் தற்போதைய நிலவரம் பின்வருமாறு:

- ஊழியர்கள் தமது வேலைக்குரிய அங்கீகாரம் கிடைப்பதில்லை எனவும் செயல்திறனின் மதிப்பீடு தெளிவாக இல்லை எனவும் புகார் கூறுகின்றனர்.

- ஊழியர்களுக்கு ஒழுங்கான பயிற்சி வழங்கப்படுவதில்லை மற்றும் வழங்கப்படும் பயிற்சிகள், பெரும்பாலும் தொழில்நுட்ப திறன்களுக்கு மட்டுமே வரையறுக்கப்படுகிறது.
- தொழில்முறை மேம்பாடு அல்லது ஊக்குவிப்புத் திட்டங்களுக்கு கட்டமைக்கப்பட்ட திட்டம் எதுவும் இல்லை.
- ஊழியர்களை எவ்வாறு திறம்பட ஊக்குவிப்பது மற்றும் அவர்களின் செயல்திறனை மேம்படுத்துவது என்பதில் முகாமையாளர்களுக்கு போதிய தெளிவின்மை.

நீங்கள் செய்ய வேண்டியது:

இந்த சிக்கல்களைத் தீர்ப்பதற்கும், தற்போதுள்ள ஊழியர் சக்தியைத் தக்கவைத்துக்கொள்வதற்கும், அனைத்து நிறுவனத் துறைகளிலும் ஊக்குவிப்பின் அளவை மேம்படுத்துவதற்கும் ஒரு முன்மொழிவுத் திட்ட அறிக்கையைத் தயாரிக்குமாறு மனித வள முகாமையாளர் உங்களிடம் கூறுகிறார். உங்கள் அறிக்கையில் பின்வரும் அம்சங்கள் உட்படுத்தப்பட வேண்டும்:

- திறமையான பயிற்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களை எவ்வாறு செயல்படுத்துதல்
- தக்கவைப்பு மற்றும் உந்துதலை ஆதரிக்க ஒரு பயனுள்ள செயல்திறன் மதிப்பீட்டை எவ்வாறு பயன்படுத்துவது பற்றிய வழிவகைகள்
- ஊழியர்களைத் தக்கவைத்துக்கொள்ளவும் ஊக்குவிக்கவும் பயனுள்ள தகவல்தொடர்புகளை எவ்வாறு பயன்படுத்துவது.
- இந்நிறுவனத்திற்கேற்ற மூன்று (03) ஊக்குவிப்பு நிகழ்வுகள் / நடைமுறைகளைக் (Motivational programmes or practices) குறிப்பிடுக. உங்களது விடையினை பொருத்தமான ஊக்குவிப்புக் கோட்பாடு அல்லது கோட்பாடுகளைக் கொண்டு ஆதரிக்க.

(25 புள்ளிகள்)

வினா 04

i. விஞ்ஞான முகாமைத்துவ அணுகுமுறைக் (Scientific Management Theory) கோட்பாட்டின் அடிப்படைக் கொள்கைகளை சுருக்கமாக விளக்குக. இந்த அணுகுமுறையுடன் தொடர்புடைய விமர்சனங்கள் காணப்படினும் , இலங்கையில் உள்ள ஒரு ஆடைத் தொழிற்சாலையில் உற்பத்தித்திறனை மேம்படுத்த இந்த கொள்கைகளை நடைமுறையில் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதைப் பற்றி விவாதிக்க.

(10 புள்ளிகள்)

ii. "வினைத்திறனான முகாமைத்துவத்தில், திட்டமிடல் மற்றும் கட்டுப்படுத்தல் என்பன, ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றன". திட்டமிடல் மற்றும் கட்டுப்படுத்தல் செயற்பாடுகளிற்கு இடையிலான தொடர்பு மற்றும் நிறுவன நோக்கங்களை அடைவதில் ஒவ்வொரு செயல்பாடும் மற்றொன்றை எவ்வாறு ஆதரிக்கிறது என்பதைப் பற்றி விவாதிப்பதன் மூலம் இக்கூற்றை விளக்குக.

(15 புள்ளிகள்)

வினா 05

i. "நிறுவனங்கள் திறந்த அமைப்புகளாக செயல்படுகின்றன" இக் கூற்றை உதாரணங்களுடன் விளக்குக. (10 புள்ளிகள்)

ii. "நிறுவன கலாச்சாரம் ஊழியர்களின் நடத்தை, செயல்திறன் மற்றும் ஒரு நிறுவனம் வெளிப்புற சவால்களுக்கு எவ்வாறு முகம் கொடுக்கிறது என்பதை கணிசமாக பாதிக்கிறது". ஒரு நிறுவனத்தின் கலாச்சாரம் கோவிட்-19 (Covid-19) தொற்றுநோய், முக்கியமான தொழில்நுட்ப இடையூறுகள், புவிசார் அரசியல் மோதல்கள் மற்றும் வர்த்தகப் போர்கள் போன்ற நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க எவ்வாறு உதவும் அல்லது தடுக்கும் என்பதைப் பற்றி விவாதிக்க. உங்கள் விடையை ஆதரிக்க நிஜ உலக அல்லது சமீபத்திய நிகழ்வுகளின் எடுத்துக்காட்டுகளைப் பயன்படுத்துக. (15 புள்ளிகள்)

பதிப்புரிமைக்குரியது